DEPOSITION OF WITNESS
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )
**O.S.No.265/2012**

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : ரபேல் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 26.08.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 26th August 2025

**முதல்விசாரணை :**

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். நான் இன்று இந்த வழக்கில் எனக்காகவும், மற்ற வாதிகளுக்காகவும் சேர்த்து எனது சத்தியபிரமாண நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது முதல் தரப்பு விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

1. 19.08.1993 தேதியிட்ட யோகபேத் வீதியாள் வகையறா 1ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவுகிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** 01.09.2004, 07.02.2003, 14.07.2012 தேதிகளிட்ட 1ம் வாதி பெயரில் செலுத்தப்பட்ட வீட்டுவரி ரசீதுகள் –3 எண்ணம் அசல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3.** 29.08.1980 தேதியிட்ட பிராதின் 1 முதல் 3 தபசில் சொத்துக்களில் 1 வது அயிட்ட சொத்துக்களை பொறுத்து 1923 ம் வருட VII சென்னப்பட்டணத்து சட்டத்தில் கண்ட

9(2) பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட நோட்டீஸ் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4.** கதவு எண்.1/173 மற்றும் 173/1 கொண்ட வீடுகளுக்கான வீட்டுவரி ரசீதுகள் எண்ணம்–5 தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**5.** சூசையம்மாள் பெயரில் செலுத்தப்பட்ட மின்கட்டண ரசீதுகள் எண்ணம்–3 தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. கொடிவழி ஜாபிதா தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. பிராது மாதிரி வரைபடம் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல்விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**